

திருச்சி மாவட்டம் துறையூரி ப கண்ணனூரில் கழக முதன்மைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துறையூர் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார் ,மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் தர்மராஜ் ராஜேந்திரன், நகரச் செயலாளர் மெடிக்கல் முரளி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, முத்துச்செல்வன் ,சிவ சரவணன், வீரபத்திரன், அசோகன், துறையூர் நகர மன்ற தலைவர் செல்வராணி மலர்மன்னன், துறையூர் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சரண்யா மோகன் தாஸ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு சுரேஷ்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் அம்மன் பாபு, குமார், மதியழகன், தமிழ்ச்செல்வன், செல்வகுமார், சேகர், கிட்டப்பா, பூபதி மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .




கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" மண், மொழி, மானம் காக்க ஓரணியில் இணை வோம் என்ற தலைப்பில் நடந்த கூட்டத்திற்கு, மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம். எல்.ஏ.தலைமை தாங்கிபேசினார். மேயர் சத்யா வரவேற்றார். ஒன்றிய, மாநகர நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். தலை மைக்கழக பேச்சாளர் ஈரோடு இளைய கோபால் கலந்து கொண்டு பேசினார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் , மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், ஓசூர் தொகுதி பார்வையாளர் வடிவேல், துணை மேயர் ஆனந்தய்யா , மற்றும் மாநில, மாவட்ட, நிர்வா கிகள், மாநகராட்சி கவுன்சிலர்கள், திரளாக கலந்து கொண் டனர். முடிவில், வடக்கு பகுதி செயலாளர் வெங்கடேஷ் நன்றி கூறினார்.

### தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்

# கிருஷ்ண லீலா புதல்வி ஜிந்தகி-அ.ஆல்ட்ரின் ஞானராஜ் திருமணம்!

## ராஜா ஈஸ்வரன் - ராணி ஸ்ரீ குமார்- ஹெலன் டேவிட்சன் -ச.தங்கவேலு சதன் திருமலைக்குமார்-எஸ்.தங்கப்பாண்டியன்-வி.பி.ராஜன் வாழ்த்துரை!

தென்காசி, ஜூலை 6-

தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர், சிவகிரி பேரூராட்சி உறுப்பினர் கிருஷ்ண லீலா எம். சீமான் கௌதம் ஆகியோரது மகள் எஸ்.ஜிந்தகி , திருச்சி மாவட்டம் முள்ளிப் பட்டி இறைவன் நகர் காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் ஞா. அந்தோணி செல்வம்- அ.மரிய செல்வி, அ.ராதா ஆகியோரது மகன் அ.ஆல்ட்ரின் ஞானராஜ் ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நாளை (7.7.2025-திங்கள் கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் சிவகிரி சி.எஸ்.ஐ தூய லூக்கா ஆலயத்தில் சிவகிரி சேகரத் தலைவர்,



சி . செல்வின் டேனியல் ராஜ், கூடன்குளம் சேகரத் தலைவர் எம். பொன் ராபின் வினோ ஆகியோரது தலைமையில் நடைபெறுகிறது, அதன் பின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிவகிரி தேவர் மகா சபை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன் தலைமை வகிக்கிறார். வாசுதேவ நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் பொன்.முத்தையா பாண்டியன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.சு.செண்பக விநாயகம்,

வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கோ.பூசைப்பாண்டியன், தென்காசி வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் வே.மனோகரன், இராய கிரி பேரூர் கழக செயலாளர் கே.டி.சி ச. குருசாமி, சிவகிரி பேரூராட்சி தலைவர் எஸ். கோமதி சங்கரி சுந்தரி வடிவேல், வாசுதேவநல்லூர் பேரூர் கழக செயலாளர் ரூபி ஆ.பாலசுப்பிர மணியன், சிவகிரி பேரூர் கழக செயலாளர் வி.எஸ்.ஜி. சேது சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர். மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஆர். கார்த்திக் வரவேற்புரையாற்றுகிறார் மாவட்ட பிரதிநிதி டாக்டர் ஜி.எஸ்.எஸ்.நல்ல சிவன் தொகுப்புரை வழங்குகிறார்.

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம். எல்.ஏ, தென்காசி பாராளு மன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், சட்டமன்ற உறுப்பினர்கள் தி.சதன் திருமலைக்குமார் , எஸ்.தங்கப்பாண்டியன், முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வி.பி.ராஜன மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.முத்துச் செல்வி, முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாபன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத் துரை, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆ.துரை, தனுஷ் எம். குமார், எஸ்.பரமகுரு, எம். பி.கே.மருதப்பன், இராம. வைரமுத்து, இரா.அருள் ஜோதி பாபா, மாவட்ட கழக நிர்வாகிகள் கோ.சுப்பையா, ஜோ.இராஜதுரை, சு.புனிதா, இல.சரவணன், வி.சந்திர லீலா, எம்.பூங்குடி, பொதுக்குழு உறுப்பினர்கள் க.வேல்ச்சாமி பாண்டியன், எஸ்.எம். சாகுல் ஹமீது, டி.வெள்ளத்துரை, பா.மாரிச்சாமி, பி.மாரி ச்சாமி, ஆர்.தேவ தாஸ், மு.பராசக்தி, த.மகேஷ்வரி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர், வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மணமக்களை வாழ்த்துகின்றனர் முடிவில் சிவகிரி 17வது வார்டு கழக செயலாளர் எம்.ரூபன் குமார் நன்றி கூறுகிறார்.



கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் வழிகாட்டுதலின்படி பொள்ளாச்சி பாராளுமன்றத் தொகுதி உறுப்பினர் கே.ஈஸ்வர சாமி எம்.பி. அவர்களின் வழிகாட்டுதலிலும் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை நிகழ்வு கே.வி.கே.எஸ்.சபரிகார்த்திகேயன் ராசு(எ)முத்துக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாகமுகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்கள் மாவட்ட பிரதிகள் ஒன்றிய பிரதிநிதிகள் பேரூர் கழக இளைஞரணி அணியினர் வார்டு செயலாளர்கள் வார்டு கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் இளைஞர் அணியினர் மகளிர் அணியினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம் கீழப்புலியூர் கிராமத்தில்

# ரூ.1.20 கோடி மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம்!

## காணொலியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை 6-

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், குன்னம் வட்டம் கீழப்புலியூர் கிராமத்தில் ரூ.1.20 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தை சென்னை அடையாறு, சாஸ்திரி நகர், நகர்ப்புற நல வாழ்வு மையத்தில் இருந்து 03.07.2025 அன்று காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியினை நேரலையில் கண்டுகளித்து, பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கீழப்புலியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண் ராஜ், இ.ஆ.ப. தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம. பிரபாகரன் முன்னிலையில், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் ஏழை,எளிய அடித்தட்டு மக்களின் நலனிற்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பொது மக்களின் உடல்நலன் மீது மிகுந்த அக்கறைக் கொண்டு, மக்களைத் தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48, முதலமைச்சரின் விரிவான மருத்து காப்பீட்டுத் திட்டம் போன்ற எண்ணிலடங்கா மக்களின் உயிர் காக்கும் திட்டங்களை அறிவித்து திறம்பட செயல்பட்டு, பொதுசுகாதாரத்துறையில் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று வருகிறார்கள்.

அரசு மருத்துவமனைகள் இல்லாத பகுதிகளிலும் மருத்துவ கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம், கீழப்புலியூர் கிராமத்தில் ரூ.1.20 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

இதனையடுத்து, ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரசவ அறை, வெளிநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, ஆய்வகம், மருந்தகம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்

இந்த கீழப்புலியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையமானது, கீழப்புலியூர் மற்றும் எழுமூர் ஆகிய இரண்டு துணை சுகாதார நிலையங்களை உள்ளடக்கியது. கீழப்புலியூர் துணை சுகாதார நிலையத்தில், கீழப்புலியூர், சிறுகுடல், கே.புதூர், சிலோன் காலனி, ஆகிய கிராமங்களும், எழுமூர் துணை சுகாதார நிலை யத்தில், எழுமூர். ஆய்குடி, மழவராயநல்லூர் மற்றும் காருக்குடி ஆகிய கிராமங்களும் பயன்பெறு கின்றன.

திறக்கப்பட்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் கீழப்புலியூரை சுற்றி யுள்ள கிராமங்களில் இருந்து சுமார் 14,000 பொது மக்கள் பயனடைவார்கள்.

கீழப்புலியூர் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவர்கள் உட்பட 4 செவிலியர்கள், 1 ஆய்வக நுட்புநர், 1 மருந்தாளுநர், 1 பகுதி சுகாதார செவிலியர், 2 கிராம சுகாதார செவிலியர், 1 சுகாதார ஆய்வாளர், 1 தாய்மை துணை செவிலியர், 1 பல்நோக்கு சுகாதார மருத்துவமனை பணியாளர் என 12 பணியாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் கொ.மாரிமுத்து, மாவட்ட சுகாதார அலுவலர் ம.கீதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, வட்டார மருத்துவ அலுவலர் ப.சேசு, தேசிய சுகாதார குழுமம் உதவி திட்ட அலுவலர் மருத்துவர் விவேகானந்தன், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமனை பணியாளர்கள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கிராம பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் ஆலோசனைக்கினங்க பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பையர்நத்தம் ஊராட்சி குறிஞ்சி நகர் பகுதியில் ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை இல்லந்தோறும் நடைபெற்றது. உடன் மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் தாமோதரன், ஒன்றிய துணை செயலாளர் ஜாகிதா செரீப்,கிளைக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. பலராமன்

**ஜூலை 6 (2015)**



**திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியச் செயலாளராக நான்கு முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**கொருக்காத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், செய்யாறு ஒன்றிய துணைத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும், ஒன்றியக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சுகுமார் சுப்பிரமணியன்

**ஜூலை 6 (2020)**



**பேரறிஞர் அண்ணா அவர்களுடன் நெருங்கி பழகிய கெங்காதரனின் மகனான இவர், இளமைக்காலம் முதலே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.**

**காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதி – ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டப் பொருளாளர் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர், பொருளாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**தனது குடும்பத்தில் நடைபெற்ற அனைத்து மண விழாக்களையும் சீர்திருத்தத் திருமணமாக முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் மற்றும் கழகத் தலைவர் ஆகியோரின் தலைமையில் நடத்தியவர். அத்துடன் தனது குடும்பத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் தமிழ்ப் பெயரை சூட்டியவர்.**

**வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**2003ஆம் ஆண்டு தேர்தல் நிதி திரட்டும் பணியில் காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கியதில் மாவட்டச் செயலாளருடன் இணைந்து மாவட்டப் பொருளாளராக பணியாற்றி பாராட்டைப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**